பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 08 திங்கட்கிழமை 21.02.2022 கதிர் 333

## மீண்டும் எரிபொருள் விலை அதிகரிப்பு?



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் கொள்வனவுக்கு டொலர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலைமையில் தற்போது ரூபா இருப்புக்கும் நெருக்கடி நிலைமை 2

# யாழ்ப்பாணத்தில் மைத்திரி விசேட வழிபாடு



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன இன்று யாழ்ப்பாணத்தின் மதத் தலங்களுக்கு விஜயம் மேற்கொண்டு விசேட வழிபாடுகளை மேற்கொண்டார்.

நல்லூர் கந்தன் ஆலயத்துக்கு சென்று விசேட வழிபாடுகளை மேற்கொண்ட அவர், பின்னர் ஆரியகுளம் நாகவிகாரைக்குச் சென்று வழிபட்டார்.

அவருடன் விசேட வழிபாடுகளில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, துமிந்த திஸாநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இன்று மாலை பருத்தித்துறையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு இடம்பெறவிருக்கும் நிலையில் சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் பலரும் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சரணடைந்த, கையளிக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது?

## கிளிநொச்சியில் கொட்டும் மழையிலும் பேரணி







(ந.லோகதயாளன்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இன்று கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்தனர். குறித்த பேரணியானது கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு டிப்போ சந்தியில் நிறைவடைந்தது.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் குறித்த போராட்டம் ஆர்ப்பாட்டப் பேரணியாக இன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பேரணியில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். 2

## பெற்றோல் குண்டு வீசி வீட்டின் மீது தாக்குதல்!

### சிறுப்பிட்டியில் வன்முறைக் கும்பல் அராஜகம்; வீதியில் வாள் ஒன்றும் மீட்பு

யாழ்., புத்தூர், சிறுப்பிட்டி - கலையொளி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த வன்முறைக் கும்பல் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதுடன் பெற்றோல் குண்டும் வீசியுள்ளது. 2

## பயங்கரவாதச் சட்டத்தை நீக்கக் கோரி அம்பாறையில் கையெழுத்து வேட்டை

(காரைதீவு நிருபர் சகா)



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்துப் போராட்டத்தின் ஓரங்கமாக இன்று அம்பாறை மாவட்டத்தில் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

இன்று காலை 10 மணியளவில் காரைதீவு பொதுச் சந்தைக்கு முன்னால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும் காரைதீவு தவிசாளருமான கி.ஜெயசிறில் தலைமையில் கையெழுத்து வேட்டை ஆரம்பமாகியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் 2

## கசூரினா கடலில் மூழ்கி குளியாப்பிட்டி நபர் சாவு

யாழ்ப்பாணம், காரைநகர் - கசூரினா கடலில் நீராடிய ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

குருநாகல், குளியாப்பிட்டியைச் சேர்ந்த அன்ரன் ஜேக்கப் ( வயது 57 ) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார் என்று ஊர்காவற்துறைப் பொலிஸார் 2

## யாழில் குழந்தையுடன் தந்தை தலைமறைவு!



தேடி அலைகின்றார் தாய்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்., இளவாலையில் 5 மாதக் குழந்தையுடன் கணவன் தலைமறைவாகியுள்ளார் என்று மனைவி இளவாலை 2

## மேல் மாடியிலிருந்து வீழ்ந்து வெளிநாட்டுப் பிரஜை மரணம்

பதுளை - எல்ல நகரிலுள்ள ஹோட்டலொன்றின் மேல் மாடியிலிருந்து கீழே வீழ்ந்து வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

28 வயதான செக் குடியரசு பிரஜையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தெமோதரை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. 2



## யாழ்ப்பாணத்தில் இன்று மைத்திரி



## சரணடைந்த, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டும் மழையின் மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மழையில் நனைந்தவாறு போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் கவனவீர்ப்பில் ஈடுபட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், ஐக்கிய நாடுகள் சபையின் மனிய உரிமைகள் செயலகத்துக்கான மகஜரை வேலன் சுவாமிகளிடம் கையளித்தனர்.

போராட்டத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களின் சங்கத்தினர் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது உறவுகள் இறந்துவிட்டனர் என்று அரசு கூறுகின்றது. போரில் இறந்தவர்களை நாங்கள் கேட்கவில்லை. சரணடைந்த, கையளிக்கப்பட்ட எமது உறவுகளையே நாங்கள் கேட்கின்றோம். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை எமக்கு வெளிப்படுத்த வேண்டும். அதற்காகவே நாங்கள் சர்வதேசத்தை நாடி நிற்கின்றோம் - என்றனர்.

## பெற்றோல் குண்டு வீசி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வாகனம் ஒன்றில் வந்த 5 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஒன்றே தாக்குதல் நடத்தியுள்ளதுடன், வீட்டின் மீது பெற்றோல் குண்டையும் வீசிவிட்டு தப்பி ஓடியுள்ளது.

குறித்த சம்பவம் தனிப்பட்ட பகை காரணமாக இடம்பெற்று இருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு அண்மையில் வீதியோரத்தில் இருந்து வாள் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

## யாழில் குழந்தையுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

கணவன் - மனைவிக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கணவன் 5 மாதப் பிள்ளையைத் தூக்கிச் சென்ற சம்பவம் தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் பொலிஸார் மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். இதையடுத்து கணவனைக் குழந்தையோடு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டது.

எனினும், பிள்ளையின்றி நீதிமன்றில் கணவன் முன்னிலையான நிலையில், 5 மாத பாலூட்டும் குழந்தை என்பதற்கிணங்க மனைவியிடம் குழந்தையை ஒப்படைக்குமாறு நீதிமன்றம் பணித்தது.

இந்நிலையில், குழந்தையை மனைவியிடம் ஒப்படைக்காது கணவர் குழந்தையோடு நேற்று தலைமறைவாகியுள்ளார்.

இதையடுத்து மனைவி இளவாலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதோடு குழந்தையைப் பல இடங்களிலும் தேடி அலைகின்றார்.

## மீண்டும் எரிபொருள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றம் பெற்றுள்ளது என வலுசக்தி அமைச்சர் உதயகம்மன்பில தெரிவித்தார்.

அத்துடன் எரிபொருளின் விலையை அதிகரிக்காவிடின் எரிபொருள் கொள்வனவுக்கான ரூபாவைத் திரட்டிக்கொள்வதில் பாதிப்பு ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் விநியோகத்தில் பாரிய நட்டத்தை கூட்டுத்தாபனம் எதிர்கொள்கின்றது. எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பலமுறை கோரிக்கையை முன்வைத்துள்ளது. தற்போதைய நிலைமையில் எரிபொருளின் விலையை அதிகரிக்காவிடின் எரிபொருள் இறக்குமதிக்கான ரூபாவைக் கூட திரட்டிக்கொள்ள முடியாத நிலைமை தோற்றம் பெறும் - என்றார்.

இதேவேளை, எரிபொருள் விலையை அதிகரிக்க அரசு கவனம் செலுத்தியுள்ளது எனவும், தற்போதைய நிலைமையில் எரிபொருளின் விலையை அதிகரிப்பது கட்டாயமானதாகும் எனவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் சர்வதேச ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி.சரவணபவன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் முதலில் கையெழுத்திட்டனர்.

அதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான மக்கள் வந்து கையெழுத்திட்டனர்.

இதேவேளை, நண்பகல் 12 மணியளவில் கல்முனை பிரதான பஸ் நிலையத்துக்கு அருகாமையிலும் கையெழுத்து வேட்டை நடைபெற்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி இதை ஏற்பாட்டை செய்திருந்தது.

## மேல் மாடியிலிருந்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதிகாலை இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வெளிநாட்டுப் பிரஜை மேல் மாடியிலிருந்து வழுக்கி கீழே வீழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## கசூரினா கடலில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர் .

இவர் தொழில் நிமித்தம் குளியாப்பிட்டி பகுதியிலிருந்து மண்டைதீவு பகுதிக்கு வந்து, தங்கி நின்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த வயோதிபர் நேற்று சனிக்கிழமை சிலருடன் இணைந்து கசூரினா கடற்கரைக்குச் சென்று கடலில் நீராடியுள்ளார்.

அதன்போது அலையில் சிக்கி நீரில் மூழ்கிய நிலையில் அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் அறிக்கையிட்டனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





N Flash Super Detergent

வேலை வாய்ப்பு

வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்

தலைமை கணக்காளர் - 20 வருட அனுபவம்
கணனி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்
சாரதி – Light vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)

மேற்பார்வையாளர் - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர் - வாகன உதவியாளர் (பெண்)
ஆசிரியர் - தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை

வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள் தேவை
இலத்திரனியல் வெதுப்பக வேலையாள் - ஆண் (முன் அனுபவம் உடையோர்)
பலகார சமையல்காரர் - முறுக்கு, மிக்சர் போன்ற நொறுக்குத்தீனிகள் தயாரிப்பவர்கள் (ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி – விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்

EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை, தகுதிவாய்ந்தவர்கள் கீழ் காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.

வட்ஸ் அப் - 0779635551
முகவரி – 186/11 NFlash super detergent
நெசவுசாலை வீதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607 A கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஜெனிவாச் சமர் ஆரம்பம்

**இந்த மாத இறுதியில் ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நாற்பத்தி ஒன்பதாவது அமர்வின்போது இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிக்க இருக்கும் அவதானிப்பு அறிக்கையின் பிரதி கொழும்புக்கு அனுப்பப்பட்டு விட்டது.**

**வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் அதனைக் கூர்ந்து நோக்கி, அவதானித்து, ஆராய்ந்து வருகின்றனர் என்று செய்திகள் வெளியான நிலையில், அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பாகவும் சில விடயங்கள் கசிந்துள்ளன.**

**அந்தப் பதினேழு பக்க அறிக்கையில் –**

- **பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுவதற்கு அரசு போதிய நடவடிக்கை எடுக்காதமை குறித்து காட்டமான கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் போதுமானவை அல்ல என அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.**
- **நாட்டின் சட்டமா அதிபர் பதவி சுயாதீனமானதாக இருக்க வேண்டும் என்று சுட்டும் அந்த அறிக்கை இப்போது வரை அப்பதவி அரசியல் நோக்கங்கள், இலக்குகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது என்பது போன்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றது. அரசுக்கு ஆதரவுத் தரப்புகளுக்கு எதிரான கிரிமினல் வழக்குகள் அடுத்தடுத்து விலக்கப்பட்டு வருகின்றமையை ஒட்டி இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருப்பதாக கருதப்படுகிறது.**
- **நீதித் துறையின் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டிருப்பவர்கள் கொல்லப்படுகின்றார்கள். 'என்கவுண்டர்' என்ற பெயரில் அரங்கேறுபவை சட்டத்துக்கு முரணான படுகொலைகள் என வர்ணித்து, அப்போக்குக்குக் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**
- **2019 ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு தாக்குதல் படுகொலை தொடர்பில் நீதியான விசாரணைகளுக்கும் அதில் வலியுறுத்தப்பட்டு இருக்கின்றது.**
- **சிவில் விவகாரங்களில் இராணுவத் தலையீடு குறைந்தபாடில்லை. சிவில் நிர்வாக அரசில் இராணுவத் தலையீடு தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக அந்த அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**
- **சிவில் சமூக செயற்பாடுகள், ஊடக சுதந்திரம் ஆகியவை மோசமான கட்டத்தை அடைந்து இருக்கின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**
- **இன, மத முரண்பாடுகள் முற்றி பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளமை விவரிக்கப்பட்டுள்ளது.**
- **யுத்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் உண்மைகளை கண்டறிதல், நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுதல் போன்ற விடயங்களில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் ஏதும் கடந்த இரண்டு ஆண்டுகளில் இடம்பெறவே இல்லை என்பது விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது.**

**– இது போன்ற பல முக்கிய அம்சங்கள் இந்த அறிக்கையில் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகளாகச் சுட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.**

**இந்த அறிக்கையின் மீது மார்ச் 3ஆம் திகதி ஜெனிவா அமர்வில் விவாதிக்கப்பட இருக்கின்றது. ஆனால் இம்முறை வாக்கெடுப்பு எதுவும் நடக்காது. எனினும் இம்முறை விவாதத்தில் அங்கத்துவ நாடுகளால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அடுத்த செப்டெம்பரில் இலங்கை தொடர்பாக வரக்கூடிய புதிய பிரேரணை சம்பந்தமான விடயத்தில் காட்டமான தாக்கத்தை செலுத்தும் என்று கூறப்படுகின்றது.**

**இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை சார்பில் பங்குபற்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நீதியமைச்சர் அலி சப்றி ஆகியோர் இந்த விடயத்தை எப்படிச் சமாளிக்க போகின்றார்கள் என்பதுதான் கேள்வி. அதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.**

# பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவின் சிவகரனிடம் 5 மணிநேரம் விசாரணை!



தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனிடம் பயங்கரவாத குற்றத்தடுப்புபிரிவின் கொழும்பிலுள்ள கிருலப்பனை அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை சுமார் 5 மணித்தியாலங்கள் விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

இந்த விசாரணைகளின் போது தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் கடந்த 10 ஆண்டுகளில் நடத்திய போராட்டங்கள், கூட்டங்கள் தொடர்பான பல்வேறு விதமான கேள்விகள் முன்வைக்கப்பட்டன என சிவகரன் தெரிவித்தார்.

அதில் பல கேள்விகள் வெறும் கற்பனைக் கதையாக இருந்ததன எனவும் வி.எஸ். சிவகரன் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வி எஸ்.சிவகரன் -

இந்த விதமாக மூன்று மாதத்துக்கு ஒரு தடவை விசாரணையை எதிர்கொள்கிறேன் எனவும், எமது ஜனநாயக ரீதியான செயற்பாட்டை சவாலுக்குட்படுத்தமுனைவது, நீதியான ஜனநாயக சட்ட ஆட்சிக்கு உகந்தவையாகத் தெரியவில்லை என உணர்கிறோம், கவலை அடைகிறோம்.

இவ்விதமாக பல சிவில் சமூக செயற்பாட்டாளர்களைத் தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்துகின்றமை என்பது சமூகத்தின் அடிப்படை நீதி பூர்வமான கருத்துரிமையையும் செயற்பாட்டையும் கேள்விக்குட்படுத்தி அடிப்படை வாழ்வுரிமையை வலிந்து நசுக்குவதாகவே எமக்குப் புலப்படுகிறது.

அரசு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான அடக்கு முறைச் செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தகவல்கள் வழங்கும் நபருக்கு 25 லட்சம் ரூபா பணப்பரிசில்!

## திருட்டுச் சம்பவம் தொடர்பாக



ரம்புக்கனை - கொட்டவெஹர ரஜமஹா விகாரையில் வைக்கப்பட்டிருந்த தங்கம் மற்றும் பளிங்கினாலான தொல்பொருள்கள் திருட்டுச் சம்பவம் தொடர்பில் தகவல்களை வழங்கும் நபருக்கு 25 லட்சம் ரூபா பணப்பரிசு வழங்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# நாட்டின் நான்கு மாவட்டங்களில் 50 வீதத்துக்குமேல் பூஸ்டர் தடுப்பூசி

நாட்டின் நான்கு மாவட்டங்களில் 50 வீதத்துக்கும் மேற்பட்டோருக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் ரஞ்சித் படுவன்துடாவ இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில் 63 வீதமானோருக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதுடன், கண்டி, அநுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் பெருமளவான மக்கள் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முல்லைத்தீவில் கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய தொற்று நோய்த்தடுப்பு பிரிவினரால் முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னாயத்த கலந்துரையாடல் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரதானமாக முல்லைத்தீவு மாவட்டத்தில்டெங்குபரவக்கூடிய இடங்களை இனங்கண்டு பரவாமல் இருப்பதற்கான அவசியமானதும் அவசரமானதுமான வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பான விளக்கத்தை முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய தொற்று நோய்த் தடுப்பு பிரிவின் வைத்தியர் வி. விஜிதரன் வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவித்திட்டமிடல் பணிப்பாளர்கள், வலயக்கல்வி பணிப்பாளர், முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொது சுகாதார பரிசோதகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஒட்சிசன் வழங்கப்படும் தொற்றாளர் எண்ணிக்கை 10 வீதத்தால் அதிகரிப்பு!

ஒட்சிசன் வழங்கப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 10 வீதத்தால் அதிகரித்துள்ளது. கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயலணியின் விசேட வைத்திய நிபுணர் அன்வர் ஹம்தானி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அதி தீவிர சிகிச்சை பிரிவிலுள்ள 77 கட்டில்களில் 66 கட்டில்களிலும் கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

5 ஆயிரத்து 700 கொரோனா நோயாளர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமையுடன், 2 ஆயிரத்து 650 பேர் வீடுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, கொரோனா மரணங்களின் எண்ணிக்கை இந்த வாரத்தில் 10 முதல் 12 வீதமாக அதிகரித்துள்ளன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இங்கிலாந்தை தாக்கியது யூனிஸ் புயல்; 3 பேர் உயிரிழப்பு



இங்கிலாந்தை யூனிஸ் புயல் தாக்கியதில் இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளமையுடன், சொத்துக்களுக்கு பேரழிவு ஏற்பட்டுள்ளது.

பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளதுடன், கட்டடங்களில் கூரைகள் புயல் காற்றில் தூக்கி வீசப்பட்டன. மரங்கள் முறிந்து விழுந்தும், காற்றில் தூக்கி எறியப்பட்டும் கார்கள் உள்ளிட்ட பெருமளவு வாகனங்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

லண்டனின் விமான நிலைய ஓடுபாதைகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த விமானங்களும் புயலால் ஓடுபாதைகளில் இருந்து நகர்ந்துள்ளன. இதனால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இங்கிலாந்து வானிலை ஆய்வு மையம் வானிலை எச்சரிக்கையை இங்கிலாந்தின் தெற்கு மற்றும் வேல்ஸின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக நேற்று விரிவுபடுத்தியது.

இங்கிலாந்தில் சில பகுதிகளில் மணிக்கு 122 மைல் வேகத்தில் நேற்று புயல் காற்று சுழன்றடித்தது.

வடக்கு லண்டனின் மஸ்வெல் ஹில்லில் வெள்ளிக்கிழமை கார் மீது மரம் விழுந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்தார் என லண்டன் தீயணைப்பு படையின் அறிக்கை தெரிவிக்கிறது.

லிவர்பூலில் தனது காரை ஓட்டிச் சென்ற 50 வயதுடைய ஒருவரும் புயல் தாக்கத்தால் நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்தார் என மெர்சிசைட் பொலிஸார் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அயர்லாந்தில் மரம் முறிந்து விழுந்ததில் 60 வயதான ஒருவர் உயிரிழந்தார் என கார்டெய் எனப்படும் தேசிய பொலிஸ் சேவை உறுதிப்படுத்தியது.

லண்டன் நகரம் உட்பட இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளில் புயல் தாக்கம் காரணமாக மின்சார இணைப்புக் கம்பங்கள் சேதமடைந்ததால் பல ஆயிரக்கணக்கான வீடுகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. லண்டனின் முக்கிய விமான நிலையங்கள் முழுவதும் டசின் கணக்கான விமானங்கள் இரத்து செய்யப்பட்டன. லண்டனின் ஹீத்ரோவில் விமானங்கள் தரையிறங்கும் போது பெரும் சிரமங்களை எதிர்கொண்டன. சில விமானங்கள் கடும் போராட்டத்தின் மத்தியில் தரையிறங்கிய பின்னர் ஓடுபாதையில் இருந்து காற்றின் வேகத்தால் நகர்த்தப்பட்டன.

குறிப்பிடத்தக்க இடையூறுகள் உள்ளபோதும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் பல விமானங்களை தொடர்ந்து தரையிறக்கி வருகிறது.

அதேபோன்று இங்கிலாந்தில் இருந்து புறப்படும் சில விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. எனினும் பெரும்பாலான விமான சேவைகள் திட்டமிட்டவாறு இடம்பெறும் எனவும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் அறிவித்துள்ளது.

1987 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஏற்பட்ட பெரும் புயலால் 18 பேர் உயிரிழந்தனர். மணிக்கு 100 மைல் வேகத்தில் வீசிய காற்றில் 1.5 கோடி மரங்கள் சாய்ந்தன. அதற்குப் பின்னர் ஏற்பட்ட மிகச் சக்தி வாய்ந்த புயலாக யூனிஸ் புயல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பிரேஸிலில் கடும் வெள்ளப் பெருக்கு 146 பேர் உயிரிழப்பு;191 பேரை காணோம்

பிரேஸில் - மெட்ரோபோலிஸ் நகரத்தில் பேரழிவை ஏற்படுத்திய வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 146 ஆக அதிகரித்துள்ளது.

பேரழிவுகள் ஏற்பட்டு 4 நாள்கள் கடந்துள்ள நிலையில் தொடர்ந்து 191 பேர் காணாமல் போயுள்ளமையால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, காணாமல் போனவர்களை தேடி, மீட்கும் பணிகள் சீரற்ற காலநிலை காரணமாக தடைப்பட்டுள்ளன என பிரேஸிலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர் மழை காரணமாக அவசரக் குழுக்கள் சனிக்கிழமை பலமுறை தங்கள் மீட்புப் பணியை இடைநிறுத்த வேண்டியிருந்தது. இந்நிலையில் வெள்ளம், மண்சரிவில் சிக்கி காணாமல் போன யாரேனும் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை தளர்ந்து உள்ளது எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

அனர்த்தங்களில் சிக்கி இறந்தவர்களில் 27 சிறுவர்களும் அடங்குகின்றனர். பாதிக்கப்பட்டவர்களில் 900க்கும் மேற்பட்டோர் தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நேற்று சனிக்கிழமை அடர்த்தியான மூடுபனிக்கு மத்தியிலும் இடிபாடுகள் மற் றும் சகதிகள் வழியாக மண்ணை தோண்டி தேடும் பணிகளில் மீட்பு பணி யாளர்கள் ஈடுபட்டிருந்தனர். தன்னார்வத் தொண்டர்களும் மீட்புப் பணிகளில் உதவி வருகின்றனர்.

ஆபத்தான பகுதிகளில் 41 மோப்ப நாய்கள் மற்றும் நவீன கருவிகளின் உதவியுடன் காணாமல் போயுள்ளவர்களைதேடும்பணிகள்இடம்பெற்றன.

கனரக இயந்திரங்களை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு கொண்டு வருவது சாத்தியமில்லை. இருக்கும் வளங்களைக் கொண்டே மீட்புப் பணிகளை முன்னெடுத்து வருகிறோம் என மெட்ரோ பொலிஸ் நகர தீயணைப்புத் துறை சிறப்பு மீட்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ராபர்டோ அமரல் தெரிவித்துள்ளார்.

மிக மோசமான பாதிப்புக்குள்ளான மலைப்பகுதி ஒன்றில் மட்டும் 80 வீடுகள் வரை நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானத்தில் சென்று பார்வையிட்ட பிரேஸில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோ, போரால் பேரழிவுகளை சந்தித்த பகுதி போன்று நகரம் காணப்படுவதாக தெரிவித்தார்.

## உக்ரைன் பகுதியில் திடீர் குண்டு வீச்சு தாக்குதல் அதிகரிப்பதால் பதற்றநிலை



உக்ரைன் எல்லையில் ரஷ்ய படைகளை குவித்துள்ளதால் போர் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், உக்ரைனில் ஒரு பகுதியில் திடீர் குண்டு வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. டான்பஸ் மாகாணத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டிலுள்ள ஸ்டானிட்சியா, லுகன்சா நகரிலுள்ள ஒரு கிராமத்தில் திடீரென குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் ஒரு மழலையர் பள்ளியின் கட்டடம் முழுவதும் சேதம் அடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. ஆசிரியர்கள் 2 பேர் படுகாயமடைந்துள்ளதுள்ளமையுடன் இந்த தாக்குதலை யார் நடத்தியது? என்பது குறித்த முழுமையான தகவல் வெளியாகவில்லை. பள்ளி மீது ரஷ்ய படைகள் தான் தாக்குதலை நடத்தின என அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் ரஷ்யா ஆதரவு கிளர்ச்சியாளர்கள் இந்த குண்டுவீச்சு தாக்கு தலை நடத்தியிருப்பதாக உறுதி செய்ய வில்லை என தகவல்கள் தெரிவிக் கின்றன. டான்பஸ் உக்ரைனின் எல்லை யோர மாகாண மாகும். இதன் ஒருபகுதி உக்ரைனின் கட்டுப்பாட்டிலும் மற்றொரு பகுதி ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டிலும்இருக்கின்றமைகுறிப்பிடத்தக்கது.

## கனடாவில் தொடரும் ஆர்ப்பாட்டம் பலர் கைது; வாகனங்கள் பறிமுதல்

கனேடிய தலைநகர் ஒட்டாவாவில் பொலிஸாரின் கடும் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் கட்டாய தடுப்பூசி ஆணைக்கு எதிராக கனரக வாகன சாரதிகள் போராட்டம் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது. போராட்டங்களில் ஈடுபட்ட மேலும் 47 பேர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். வெள்ளிக்கிழமை 100க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் தொடந்து போராட்டக்காரர்களை கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வெள்ளிக்கிழமை முதல் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் போராட்டங்களில் ஈடுபட்ட 53 வாகனங்கள் இழுத்துச் செல்லப்பட்டு அகற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர். நான்காவது வாரமாக வார இறுதி நாள் போராட்டம் நேற்றும் இடம்பெற்ற போதும் கடும் கட்டுப்பாடுகள் காரணமாக இதில் குறைந்தளவான எதிர்ப்பாளர்களே பங்கேற்றிருந்தனர். ஜனவரி 28 அன்று ஆர்ப்பாட்டம் தொடங்கிய பின்னர் முதன்முறையாக நாடாளுமன்ற வளாகத்துக்கு அருகில் உள்ள வெலிங்டன் தெருவில் இருந்து பொலிஸார் போராட்டக்காரர்களை அகற்றினர்.

# அணுக்கழிவு மையத்தை நாடாளுமன்ற வளாகத்திற்குள் புதைத்து வைக்குமாறு சீமான் காட்டமான அறிக்கை



கூடங்குளம் அணுக்கழிவு மையத்தை தமிழக அரசு அனுமதிக்க கூடாது என்று இன்று நாம் தமிழர் கட்சியின் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

மக்கள் நலத்தையும், மண்ணின் வளத்தையும் நாசப்படுத்தக் கூடிய கூடங்குளம் அணு உலை செயல்படத் தொடங்கிய காலம்தொட்டே நாம் தமிழர் கட்சி அதனைக் கடுமையாக எதிர்த்து வருவதுடன் அணு உலைக் கழிவுகளை என்ன செய்வீர்கள்? என்ற கேள்வியையும் எழுப்பி வந்தது.

கடந்த 2019 ஆம் ஆண்டு கூடங்குளத்தில் தற்காலிக அணுக்கழிவு மையம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்தபோதும், கடந்த 2021ஆம் ஆண்டு புதிய அணுக்கழிவு மையம் அமைக்க இந்திய அணுவாற்றல் ஒழுங்கு முறை ஆணையம் அனுமதி வழங்கியபோதும் கடுமையான எதிர்ப்பினை பதிவு செய்ததுடன், தமிழ்நாடு முழுவதும்தொடர்போராட்டங்களையும் நாம் தமிழர் கட்சி முன்னெடுத்தது.

ஆனால், மக்கள் எதிர்ப்பினை துளியும் பொருட்படுத்தாது, எதேச்சதிகார போக்குடன் கூடங்குளத்தில் முதல் மற்றும் இரண்டாம் அணு உலைக்கான தற்காலிக அணுக்கழிவு மையத்தை அமைக்க மத்திய அரசு அனுமதித்தது.

எதிர்காலத்தில் கூடங்குளத்தையே நிரந்தர அணுக்கழிவு மையமாக மாற்றி இந்தியாவில் உள்ள அனைத்து அணுவுலைகளில் வெளியாகும் அணுக்கழிவுகளையும் கூடங்குளத்தில் கொண்டு வந்து கொட்டும் பேராபத்தும் ஏற்படக் கூடும். அணுக்கழிவுகளைப் பாதுகாப்பாக சேமித்து வைக்க வேண்டுமென்ற அக்கறை இருக்குமாயின், அதனை பாதுகாப்பு மிக்க பகுதியான டெல்லியில், அதிலும் குறிப்பாக 24 மணி நேரமும் அதி உயர் பாதுகாப்பு நிறைந்த பகுதியான நாடாளுமன்ற வளாகத்திற்குள் புதைத்து வைப்பதுதான் நாட்டு மக்களை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கான மிகச்சரியான நடவடிக்கையாக இருக்க முடியும்.

ஆகவே, கூடங்குளத்தில் அடுத்தடுத்து அணுக்கழிவு மையம் அமைக்கின்ற முயற்சியினை உடனடியாகக் கைவிடவேண்டும்.

மேலும் கூடங்குளத்தில் அணுக்கழிவு சேமிப்பு மையம் அமைப்பது குறித்து விவாதிக்க விரைவில் தமிழகம் வரவுள்ள இந்திய அணுசக்தி கழகத்தின் தலைவர் புவன் சந்திரபதாவிடம் தமிழர்களின் ஒருமித்த கருத்தான, கூடங்குளம் அணுக்கழிவு மையம் அமைப்பதற்கான எதிர்ப்பினை அழுத்தம் திருத்தமாக தமிழ்நாட்டு அரசு பதிவு செய்ய வேண்டும்.

கூடங்குளத்தில் அணுக்கழிவு மையம் அமைப்பதற்கு ஒருபோதும் அனுமதி வழங்கிட கூடாதென தமிழ்நாட்டு அரசினை கேட்டுக்கொள்கிறேன். அதையும் மீறி அணுக்கழிவு மையம் அமைக்கும் முயற்சி தொடருமேயானால், மாபெரும் மக்கள் திரள் போராட்டத்தை நாம் தமிழர் கட்சி சார்பாக முன்னெடுக்க நேரிடும், என்று அந்த அறிக்கையில் சீமான் குறிப்பிட்டுள்ளார்.

## எல்லை நிலையே சீனாவுடனான உறவை தீர்மானிக்கும் இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கருத்து

ஜேர்மனியில் நடைபெற்ற முனிச் பாதுகாப்பு மாநாட்டின் குழு நிலை விவாதத்தில் இந்தியா சார்பில் பங்கேற்ற வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், நிகழ்வின் பின்னர் சீனாவுடனான இந்தியாவின் உறவு குறித்து ஊடகவியலாளர்களுக்கு பேட்டியளித்தார்.

45 ஆண்டுகளாக நிலையான எல்லை நிர்வாகம் இருந்தது. 1975 முதல் எல்லையில் இராணுவ உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. நாங்கள் படைகளைக் கொண்டு வரக்கூடாது என்று சீனாவுடன் ஒப்பந்தம் செய்தோம். கட்டுப்பாட்டுக் கோடு தொடர்பான ஒப்பந்தங்களை சீனர்கள் மீறினர். எல்லையின் நிலை உறவின் நிலையைத் தீர்மானிக்கும். இது இயற்கையானது.

எனவே வெளிப்படையாக இப்போது சீனாவுடனான உறவுகள் மிகவும் கடினமான கட்டத்தில் உள்ளன. இந்தியாவுடனான எழுத்துபூர்வ ஒப்பந்தங்களை 2020 இல் சீனா புறக்கணித்தது. ஒரு பெரிய நாடு, எழுதப்பட்ட உறுதிமொழிகளை புறக்கணிக்கும்போது, அது முழு சர்வதேச சமூகத்திற்கும் பிரச்சினை என்று நான் நினைக்கிறேன், என்று அவர் தெரிவித்திருக்கிறார்.



ஜேர்மனியின் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் ஸ்வென்ஜா ஷூல்ஷ்சைச் சந்தித்து பசுமை வளர்ச்சி மற்றும் சுத்தமான தொழில்நுட்பத்தைமேம்படுத்துவதற்கான உறுதிப்பாடு தொடர்பாக உரையாடியதையும், அயர்லாந்து வெளியுறவு அமைச்சர் சைமன் கோவினியை சந்தித்தது குறித்தும் தமது டுவிட்டர் பதிவில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.




## ஆப்கானிஸ்தானுக்கு மீண்டும் உதவி பொருள்களை அனுப்பியது இந்தியா

ஆப்கானிஸ்தானில்இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியதை அடுத்து அங்கு ஆட்சி அதிகாரத்தை தலிபான்கள் கைப்பற்றினர். புதிய அரசாங்கத்தை அமைத்துள்ள தலிபான்கள் கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். குறிப்பாக பெண்களுக்கான உரிமைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், தலிபான் அரசாங்கத்தை உலக நாடுகள் அங்கீகரிக்கவில்லை. சர்வதேச அங்கீகாரம் கிடைக்காததால் கடும் பொருளாதார நெருக்கடியில் ஆப்கானிஸ்தான் சிக்கித் தவித்து வருகிறது.

இதற்கிடையே மனிதாபிமான அடிப்படையில் இந்தியா போன்ற நாடுகள் ஆப்கானிஸ்தானுக்கு உதவி வருகின்றன. கடந்த டிசெம்பர் மாதம் இந்தியா மருந்துப் பொருள்களை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பியது. அதன் பின் இருமுறை மருந்துகள் உள்ளிட்ட பொருள்களை விமானத்தில் அனுப்பியது. கடந்த 10 ஆம் திகதியும் ஆப்கானிஸ்தானுக்கு 50 ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமையை இந்தியா அனுப்பிவைத்தது.

அதன் பின்னதாக, இந்தியாவால் ஆப்கானிஸ்தானுக்கு மீண்டும்3தொன்எடையுடைய மருந்துகளும், குளிரைத் தாங்கக்கூடிய உடைகளும் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு தலிபான்கள் இந்தியாவுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் இந்த உதவிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் இரு நாடுகளுக்கிடையேயான உறவை மேலும் மேம்படுத்துவதை எதிர்நோக்கி இருக்கிறோம் என்றும் ஆப்கானிஸ்தான் தொடர்பாடல் அதிகாரியொருவர் கூறியிருக்கிறார்.

## இந்தூரில் சாண எரிவாயு ஆலை ஆரம்பித்து வைத்தார் பிரதமர் மோடி

மத்திய பிரதேசம் மாநிலம் இந்தூரில் அமைக்கப்பட்ட சாண எரிவாயு ஆலையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். அந்த ஆலையில் நாளொன்றுக்கு 550 தொன் பிரிக்கப்பட்டமைக்கும் குப்பைகள் சுத்திகரிக்கப்படும் என்றும், நாளொன்றுக்கு 17,000 கிலோ இயற்கை எரிவாயு, 100 தொன் இயற்கை உரம் போன்றவையும் உற்பத்தி செய்யப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோவர்தன் ஆலை என்று பெயரிடப்பட்ட இந்த ஆலையானது, கழிவுப்பொருள்களை பணமாக்கும் கண்டுபிடிப்பு என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஆலையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய இந்தியப் பிரதமர் மோடி, நாடு முழுவதும் உள்ள நகரங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைஆக்கிரமித்துள்ளலட்சக்கணக்கான தொன் குப்பைகள் காற்று மற்றும் நீர் மாசுபாட்டை ஏற்படுத்தி உள்ளன. இது நோய்கள் பரவுவதற்கு முக்கிய காரணமாகும். எனவே, தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், இந்த பிரச்சினை தீர்க்கப்படுகிறது, என்று தெரிவித்துள்ளார்.

இந்த ஆலை பசுமை இல்லவாயுக்கள் வெளியேற்றத்தை குறைத்து இயற்கை உரத்தை வழங்குவதோடு, பசுமை எரிசக்தியையும் வழங்கும் என்றும் இந்த ஆலைக்காக 150 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும், இங்கு உற்பத்தி செய்யும் இயற்கை வாயுவில் 50 சதவீதத்தை இந்தூர் நகராட்சி கொள்முதல் செய்யும் என்றும் இந்த எரிவாயு நகர பேருந்துகளில் எரிபொருளாக பயன்படுத்ததிட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஆலை நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# ரயில்வேக் காணிக்குள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வேலிகள் அகற்றப்பட்டன



## வாழைச்சேனைப் பகுதியில் நடவடிக்கை

மட்டக்களப்பு – கொழும்பு பிரதான வீதியில் மஜ்மாநகர் பிரதேசத்தில் ரயில்வேத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் சட்டவிரோதமான முறையில் சில நபர்கள் வேலிகள் அமைத்தனர் எனக் கூறப்படுகின்றமையை அடுத்து ரயில்வேத் திணைக்கள அதிகாரிகள் பாதுகாப்பு பிரிவினருடன் இணைந்து அந்த வேலிகளை அக்கற்றியுள்ளனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில்வே பாதுகாப்பு சேவை உதவி அத்தியட்சகர் ஆர்.பி.ஏ.ரத்னமலலவின் பணிப்புரைக்கமைய, மட்டக்களப்பு மாவட்ட ரயில்வே பொறியியலாளர் ஆர்.ஜே.அலெக்சாண்டரின் அனுசரணையோடு வருகை தந்த பொலிஸார் மற்றும் ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இணைந்து ரயில்வே காணிக்குள் அமைக்கப்பட்ட வேலியை அகற்றினர்.

ரயில்வே திணைக்களத்திற்குச் சொந்தமான காணியில் 15 நபர்கள் சட்டவிரோதமான முறையில் வேலி அமைத்த நிலையில் வேலி அக்கற்றப்பட்டு சம்பந்தப்ப்ட்ட நபர்களை காணிக்குள் வரவேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

# வல்லப்பட்டையுடன் ஒருவர் மட்டக்களப்பில் சிக்கினார்

மட்டக்களப்பு – கண்ணகை அம்மன் ஆலய வீதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் வல்லப்பட்டையுடன் தங்கியிருந்த அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 1, 700 கிராம் வல்லப்பட்டையை தாங்கள் மீட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸாருடன் இணைந்து கண்ணகி அம்மன் ஆலய வீதியிலுள்ள விடுதி ஒன்றை முற்றுகையிட்டு சோதனை செய்த போது 1, 700 கிராம் வல்லப்பட்டையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடையவர் எனவும், மட்டக்களப்பில் வல்லப்பட்டையை விற்பனை செய்வதற்காக அதன் மாதிரியுடன் வந்து விடுதியில் தங்கியிருந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பெரும் தொகையான வல்லப்பட்டை அளுத்கமவில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.




# மண்டூர் இராமகிருஷ்ன திருக்கோயில் திறப்பு விழாவும் மகாகும்பாபிஷேகமும்

மண்டூர் இராமகிருஷ்ண திருக்கோயில் திறப்பு விழாவும் கும்பாபிஷேகமும் எதிர்வரும் 22,23 ஆம் திகதிகளில் பிரமாண்டமாக நடைபெறவுள்ளன. இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹராஜ், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ரீமத் சுவாமி ராஜேஸ்வரானந்தஜி மஹராஜ், மட்டக்களப்பு – கல்லடி இராமகிருஷ்ண மிஷன் முகாமையாளர் சுவாமி தக்ஷஜானந்தர்ஜீ மஹராஜ், உதவி முகாமையாளர் ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மகராஜ் ஆகியோரின் தலைமையில் இரு நாள்களும் மிகவும் பிரமாண்டமாக இந்நிகழ்வு நடைபெற உள்ளது. பக்த அடியார்கள் அனைவரும் இத்திருக்கோவில் கும்பாபிஷேக நிகழ்வில கலந்து கொண்டு பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருவருளைப் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர்.

# பொத்துவிலில் டெங்கு பரவ இடமளித்த 2பேர் மீது வழக்கு

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த 02 நபர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும், 27 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய பொத்துவில் பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் விசேட டெங்கு ஒழிப்பு செயலணியினர் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர் என அவர் தெரிவித்தார்.

பருவ மழை பெய்ததையடுத்து பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கடந்த இரண்டு மாதங்களில் சுமார் 198 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், இதில் கூடுதலாக கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட 07 கிராம சேவகர் பிரிவுகளில் 535 வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு பரிசோதனையை அடுத்தே டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த 02 நபர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளமையோடு 27 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டவர்கள் ஒரு வார காலத்திற்குள் குறித்த இடங்களை துப்புரவு செய்ய வேண்டுமெனவும், தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

நுளம்பு உருவாகாமல் தடுப்பதற்கு சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்தல், நுளம்பின் வதிவிடத்தை முற்று முழுதாக அழித்தல், வதிவிடத்தில் இனம்பெருகாது கட்டுப்படுத்தல் என்பன முக்கியமானவை. இவை தொடர்பாக மக்களுக்கு துண்டுப்பிரசுரம் மூலமும், ஒலிபெருக்கி ஊடாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டுவருவதாகவும் கூறினார்.

டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக்காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்திற்குள் துப்புரவு செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி, டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்புரவாக தமது இடங்களை வைத்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

# டெங்கு பரவும் 'சிவப்பு வலயமாக' மட்டக்களப்பு மாவட்டம் அறிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டம் சிவப்பு வலயமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜி.சுகுணன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

இலங்கையில் கடந்த ஆண்டு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட மாவட்டங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்ட மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் இருப்பதாகவும், 2,800 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருக்கின்றனர் எனவும், அத்தோடு அதில் நான்கு போர் மரணத்தை தழுவியிருந்தனர் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இவ்வாண்டின் பெப்ரவரி மாதம் வரையான காலப் பகுதியில் 75 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், இந்த டெங்கு நோயின் பரம்பலில் முக்கிய விடயமாக காணப்படுவது டெங்கு நுளம்பை அழித்தல் என்னும் விவகாரத்தை நாங்கள் அனைவரும் விளங்கிக்கொள்ளுதல் அவசியமானது எனவும், அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு நகரப்பகுதியில் அதிக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருப்பதால், முக்கியமாக நகரப்பகுதிகளில் டெங்கு நுளம்பை அழிக்கும் செயற்பாட்டை தாம் மேற்கொண்டு வருகிறேன் எனவும் தெரிவித்தார்.

டெங்குப் பரவலை மாவட்டத்தில் முற்றாகக் கட்டுப்படுத்துவதாயின் உள்ளூராட்சி மன்றங்கள், நிறுவனங்கள் மற்றும் கிராமிய சங்கங்களின் ஒத்துழைப்பு சுகாதார துறைக்கு இக்காலகட்டத்தில் மிகவும் அவசியமாக இருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி.சுகுணன் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ரோகித் தலைமையில் இந்திய டெஸ்ட் அணி அறிவிப்பு ரகானே, புஜாரா நீக்கப்பட்டு இளையோருக்கு வாய்ப்பு

இந்திய டெஸ்ட் அணியின் தலைவராக ரோகித் சர்மாவை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இன்று அறிவித்துள்ளது. தென்னாபிரிக்காவுக்கான சுற்றுப்பயணத்தோடு இந்திய டெஸ்ட் கிரிக்கெட் தலைமைப் பதவியிலிருந்தும் விராட் கோலி விலகிய பின்னர் ரோகித் சர்மா காயமடைந்திருந்த காரணத்தினால் தற்காலிகத் தலைவராக கே.எல்.ராகுல் கடமையாற்றியிருந்தார்.

ரோகித் தலைமையிலான இந்திய அணி அடுத்த மாதம் இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதற்கான 18 பேர் கொண்ட டெஸ்ட் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டு நடைபெற்ற தொடர்களில் மோசமான துடுப்பாட்டப் பெறுதிகளைக் கொண்டிருந்த ரகானே மற்றும் புஜாரா இருவரும் இந்த டெஸ்ட் அணியில் இடம்பெறவில்லை.

ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கிலும் ரி-20 தொடரின் முதலிரு போட்டிகளிலும் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இலங்கை அணிக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இடம் பெற்றுள்ள இந்திய அணி வீரர்கள் விவரம்:

ரோகித் சர்மா (அணித்தலைவர்), பும்ரா (துணைத்தலைவர்), மயங்க் அகர்வால், பிரியங் பஞ்சல், விராட் கோலி, ஷ்ரேயாஸ் அய்யர், ஹனுமா விஹாரி, சுப்மன் கில், ரிஷப் பண்ட், அஸ்வின், ஜடேஜா, ஜெய்ன்ந்த் யாதவ், குல்தீப் யாதவ், மொகமட் சமி, சிராஜ், உமேஷ் யாதவ், சவுரப் குமார், கே.எஸ்.பரத்





# சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் உதவிப் பயிற்சியாளர் கடிச் விலகல்

ஐ.பி.எல். 2022 சீசனுக்கான மெகா ஏலம் பெங்களூரு நகரில் அண்மையில் நடந்து முடிந்தது. இந்த நிலையில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் உதவி பயிற்சியாளர் சைமன் கடிச் தனது பொறுப்பிலிருந்து விலகியுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான, அவர் ஐ.பி.எல். களத்தில் வீரராகவும், பயிற்சியாளராகவும் பல்வேறு அணிகளுடன் பயணித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மெகா ஏலத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி பின்பற்றிய வழிமுறையில் உடன்பாடு இல்லாமையே அவரது திடீர் விலகலுக்கு காரணம் என்று உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏலத்திற்கு முன்பாக வகுக்கப்பட்ட திட்டங்களை அணி உரிமையாளர் தரப்பு, ஏலத்தின்போது நிராகரித்தமை அவருக்கு அதிருப்தியைக் கொடுத்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

# சர்வதேச ஒலிம்பிக் சபையின் வருடாந்தக் கூட்டம் மும்பையில்



101 வாக்களிக்கும் உறுப்பினர்கள் மற்றும் 45 கௌரவ உறுப்பினர்களை உள்ளடக்கிய சர்வதேச ஒலிம்பிக் சபையின் வருடாந்தக் கூட்டத்தை நடத்துவது தொடர்பான வாக்கெடுப்பில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

மும்பையில் இந்தக் கூட்டத்தை நடத்த 99 சதவீதமானோர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து சர்வதேச ஒலிம்பிக் சபைக்கான 2023 ஆம் ஆண்டு வருடாந்தக் கூட்டத்தை மும்பையில் நடத்த அனுமதி கிடைத்துள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் நகரத்தைத் தேர்ந்தெடுப்பது உள்ளிட்ட உலகளாவிய ஒலிம்பிக் இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள் குறித்து வருடாந்தக் கூட்டங்களில் விவாதித்து முடிவெடுக்கப்படுகிறது. 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் இந்தியா இந்தக் கூட்டத்தை நடத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

இதுகுறித்துஊடகவியலாளர்களுக்குத் தகவல் வழங்கிய இந்திய மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், சர்வதேச ஒலிம்பிக் சபையின் வருடாந்தக் கூட்டம் இந்தியாவில் நடைபெறுவது வரலாற்றுத் தருணமாகும், என்று தெரிவித்திருக்கிறார்.

இந்தியவிளையாட்டுத்துறை சமீபத்திய ஆண்டுகளில் மாபெரும் முன்னேற்றம் கண்டுள்ளது என்றும், இந்தியாவில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்த வேண்டும் என் நீண்ட கால கோரிக்கையின் வளர்ச்சியாக இது இருக்கும் என்றும், இந்திய விளையாட்டின் புதிய சகாப்தத்தை இது தொடங்கிவைக்கும் என்றும், சர்வதேச ஒலிம்பிக் சபையில் இந்தியா சார்பில் உறுப்பினராக உள்ள நீட்டா அம்பானி தெரிவித்திருக்கிறார்.

# பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரிலிருந்து சண்டைபோட்டு வெளியேறினார் போக்னர்

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் வீரர் ஜேம்ஸ் போக்னர், சம்பளப் பிரச்சினை காரணமாக பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரிலிருந்து இடைநடுவில் வெளியேறியிருக்கிறார்.

பாகிஸ்தான் சுப்பர்லீக் தொடரில் குவெட்டா கிளாடியேட்டர்ஸ் அணி சார்பில் விளையாடிவந்த போக்னர், அணிநிர்வாகத்துடனும்போட்டிஏற்பாட்டாளர்களுடனும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவே இறுதியாக நடைபெற்ற சில போட்டிகளில் விளையாட மறுத்துவந்தார் எனசெய்திகள் தெரிவிக்கின்றன.

ஏமாற்றுவேலைகள் நடந்தன எனவும், தனது சம்பளப் பணம் வழங்கப்படவில்லை என்றும் தனது டுவிட்டர் பதிவில் போஃக்னர் தெரிவித்திருக்கிறார். இடைநடுவில் வெளிறே நேர்ந்தமைக்காக பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்களிடம் அவர் மன்னிப்பும் கோரியிருந்தார். அணி நிர்வாகிகளுடன் நடைபெற்ற பேச்சுக்களின்போது கோபமடைந்த போக்னர், தான் தங்கியிருந்த விடுதியின் அலங்கார மின் விளக்கின்மீது துடுப்புமட்டை மற்றும் தலைப் பாதுகாப்புக் கவசங்களை வீசி எறிந்து சேதமாக்கினார் எனவும், பின்னர் சேதங்களுக்கான பணத்தினைச் செலுத்தினார் எனவும் தெரிய வருகிறது. சம்பளப் பணத்தினைச் செலுத்துவதற்கு போக்னரின் முகாமையாளரால் முதலில் பிரித்தானிய வங்கிக் கணக்கொன்று வழங்கப்பட்டதாகவும், அதற்கு ஒரு குறித்த தொகை செலுத்தப்பட்ட பின்னர், ஆஸ்திரேலிய வங்கிக் கணக்கொன்றுக்கு சம்பளப்பணத்தை முழுமையாக வைப்பிலிடும்படி கோரப்பட்டதாகவும் அணி நிர்வாகம் மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் வைப்பிலிட்ட தொகை மீள வழங்கப்பட்ட பின்னரே, புதிதாக தரப்பட்ட கணக்கிற்கு சம்பளப் பணத்தை வைப்பிலிடமுடியும் என்று போக்னர் தரப்புக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. அத்தோடு, போக்னர் நாடு திரும்புகையில் விமான நிலைய குடிவரவு, குடியகல்வுப் பிரிவினரோடும் மோசமாக நடந்கொண்டார் எனவும் முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும், போக்னர் இனி பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர்களில் பங்கேற்பது தடைசெய்யப்படும், என்றும் குறித்த அறிக்கை கூறுகிறது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு












# உயர்தரப்பரீட்சைக்கு இடையூறு ஏற்படுத்திய சு. கட்சியின் மாநாடு!

## வவுனியா மக்கள் விசனம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வன்னி மாநாட்டால் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற உயர்தரப்பரீட்சைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டதாக மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

நகரசபையினருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடையடுத்து கட்சியின் மாநாட்டை ஏற்பாடு செய்தவர்களுக்கு ஒலி பெருக்கியின் சத்தங்களைக் குறைத்து மாணவர்களின் பரீட்சைக்கு இடையூறின்றி கட்சியின் மாநாட்டை நடாத்துமாறு அறிவித்தல் வழங்கப்பட்ட சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

நேற்று (சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வன்னி மாநாடு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் ஆரம்பிக்க நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன. எனினும் மண்டபத்தில் ஒலி பெருக்கியின் அதிக சத்தத்தால் அருகிலுள்ள வைசப்பிரகாச மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து கட்சியின் மாநாட்டை ஏற்பாடு செய்தவர்களிடம் பாடசாலையில் உயர்தரமாணவர்கள்பரீட்சைஇடம்பெற்றுவருகின்றது. எனவே ஒலி பெருக்கியின் சத்தங்களை குறைத்துக்கொண்டுமாநாட்டைநடத்துமாறு நகரசபையினரால் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. ஒருசில மணித்தியாலயத்தின் பின்னர் கட்சியின் மாநாடு முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமாகியது. இருப்பினும் மாநாட்டுக்கு வாகனங்களில் வருகைதந்த போது ஆசிரியர்கள் சிலர் பரீட்சை மண்டபத்தில் இருந்து வெளியே எட்டிப் பார்த்த வண்ணம் இருந்தமையை அவதானிக்க கூடியதாக இருந்தது. இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் நிமால் சிறிபால, இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜெயசேகர, துமிந்த திஸாநாயக்க, முன்னாள் மத்திய மாகாண ஆளுநர் சரத் ஏக்கநாயக்கா, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் மற்றும் நகரசபை, பிரதேச சபை உறுப் பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நாட்டில் காணாமல் போனோர் சிலர் வெளிநாடுகளில் வாழ்கிறார்களாம்!

## சீனாவுக்கான இலங்கை தூதுவர் தகவல்

யுத்தம் ஒன்றின்போது காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பது அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பது யதார்த்த ரீதியாக முடியாத ஒரு விடயமாகும் என சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கோஹன தெரிவித்துள்ளார். இது தொடர்பான போராட்டங்களை நடத்திக் கொண்டிருப்பது அர்த்தமற்றது. அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி இந்த விடயத்தில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதே இதற்குத் தீர்வாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், காணாமல் போனோர்களில் சிலர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வெள்ளவத்தையில் சண்டித்தனம் காட்டினார் முக்கிய அமைச்சர்!

*அரசாங்கத்தில் முக்கிய அமைச்சு பதவி வகிக்கும் ஒருவர் பெருந்தொகை மின் கட்டணத்தை செலுத்தவில்லை எனத் தெரிய வந்துள்ளது.*

*வெள்ளவத்தை, சரணங்கர வீதியிலுள்ள வீடொன்றில் வசிக்கும் பிரபல அமைச்சரவை அமைச்சரே இவ்வாறு செலுத்தவில்லை எனத் தெரிய வருகிறது.*

*சுமார் ஒரு கோடியே 20 லட்சம் ரூபா மின்சாரக் கட்டணம் நிலுவையில் உள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால் வெளிப்படுத்தினார். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க சென்ற மின்சார சபை ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைச்சர் செயற்பட்டுள்ளார்.*

*மின்மாணியை பரிசோதிக்க வந்த அதிகாரிகளை, அமைச்சர் தனது பாதுகாப்புப் படையினர் மூலம் அச்சுறுத்தினார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.*

# விர்ஜின் கேலக்டிக் நிறுவனத்தின் தலைமை பதவியிலிருந்து இலங்கை செல்வந்தர் விலகல்!



*விர்ஜின் கேலக்டிக் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தலைமை பதவியிலிருந்து விலகுவதற்கு இலங்கையின் செல்வந்தரான சமத் பலிஹபிட்டிய தீர்மானித்துள்ளார் எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.*

*பலிஹபிட்டிய ஏன் விர்ஜின் கேலக் டிக் நிறுவனத்தை விட்டு வெளியேறுகிறார் என்பது தொடர்பாக தெளிவான அறிவிப்புகள் எவையும் வெளியாக வில்லை. எனினும், அவர் ஏனைய பொது நிறுவனங்களின் நிர்வாகக் கடமைகளில் கவனம் செலுத்துவார் என்று நிறுவனம் கூறியுள்ளது.*

*விர்ஜின் கேலக்டிக் பங்குகள் 2019 ஆம் ஆண்டு அறிமுகமானதில் இருந்து நேற்று 81 சதவீதம் குறைந்து 9 டொலராகக் குறைந்துள்ளது எனவும் சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், விர்ஜின் கேலக்டிக் நிறுவனத்தின் இடைக்காலத் தலைவராக இவான் லோவலின் செயற்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு முதல் விர்ஜின் கேலக்டிக் நிறுவனத்தின் தலைவராக சமத் பலிஹபிட்டிய செயற்பட்டு வந்தார்.*

*1976 ஆம் ஆண்டு இலங்கையில் பிறந்த சமத் தனது 5 ஆவது வயதில் கனடாவுக்குச் சென்றிருந்தார். அவரது தந்தை கனடாவில் உள்ள இலங்கை உயர்தூதரத்தில்பணிபுரிந்தார், அவரது பத விக்காலத் துக்குப் பிறகு தனது குடும்பத் துடன் கனடாவில் குடியேறினார் என்பதும் குறிப்பிடத் தக்கது.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.02.2022இல் வெளியிடப்பெற்றது.